(ஒன்பதாவது பாராளுமன்றம் - நான்காவது கூட்டத்தொடர்)

இல. 1(6).]

# பாராளுமன்றம்

## 1 ஆம் ஒழுங்குப் புத்தகத்துக்கான அனுபந்தம்

## 2023 மார்ச் 24 வெள்ளிக்கிழமை வெளியிடப்பட்டது

## 2023 ஏப்ரல் 04, செவ்வாய்க்கிழமை

## பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

*

பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்,— இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல.1),— 1985 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்கச் சட்டத்தின் மூலமும் 1987 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்கச் சட்டத்தின் மூலமும் திருத்தப்பட்டவாறான, 1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) சட்டத்தின் 4(1) மற்றும் 14 ஆம் பிரிவுகளுடனும் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய அச்சட்டத்தின் 20 ஆம் பிரிவின் கீழ், நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2023 பெப்ரவரி 22 ஆம் திகதிய 2320/46 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2023.03.22 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*

பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்,— இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல. 2),— 1985 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்கச் சட்டத்தின் மூலமும் 1987 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்கச் சட்டத்தின் மூலமும் திருத்தப்பட்டவாறான, 1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) சட்டத்தின் 4(1) மற்றும் 14 ஆம் பிரிவுகளுடனும் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய அச்சட்டத்தின் 20 ஆம் பிரிவின் கீழ், நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2023 பெப்ரவரி 22 ஆம் திகதிய 2320/47 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2023.03.22 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*

நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர்,— குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் கட்டளை,— 2013 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 7(2) ஆம் பிரிவின் கீழ் நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சரால் விதிக்கப்பட்டு, 2023 சனவரி 30 ஆம் திகதிய 2317/28 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2023.03.21 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது.

## 2023 ஏப்ரல் 25, செவ்வாய்க்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

1320/2023

கௌரவ (திருமதி) ரோஹினீ குமாரி விஜேரத்ன,— வனசீவராசிகள் மற்றும் வனவளங்கள் பாதுகாப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) எலஹெர – கிரித்தலய சரணாலயத்தின் பரப்பளவு, ஏக்கர்களில் எவ்வளவு என்பதையும்;

(ii) இன்றளவில் மேற்படி சரணாலயத்திற்குச் சொந்தமான சுமார் 250 ஏக்கர் விஸ்தீரணம் கொண்ட பிரதேசத்தில் பாரிய சூழல் அழிவு ஏற்பட்டுள்ளதை அறிவாரா என்பதையும்;

(iii) அவ்வாறாயின், அது தொடர்பாக அமைச்சினால் எடுக்கப்படும் நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1326/2023

கௌரவ இஷாக் ரஹுமான்,— கமத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2019 ஆம் ஆண்டு இலங்கையில் சோளப் பயிர்செய்கை மேற்கொள்ளப்பட்ட நிலப்பரப்பின் அளவு யாதென்பதையும்;

(ii) 2020/2021 பெரும் போகத்தில் சோளப் பயிர்செய்கை மேற்கொள்ளப்பட்ட நிலப்பரப்பின் அளவு யாதென்பதையும்;

(iii) மேற்படி போகத்தில் பயிர்செய்கைக்குப் பயன்படுத்தப்பட்ட உள்நாட்டு சோள விதைகளின் அளவு மற்றும் இறக்குமதி செய்யப்பட்ட விதைகளின் அளவு தனித்தனியே யாதென்பதையும்;

(iv) ஒரு கிலோகிராம் உள்நாட்டு சோள விதையின் விலை மற்றும் ஒரு கிலோகிராம் இறக்குமதி செய்யப்பட்ட சோள விதையின் விலை தனித்தனியே எவ்வளவென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) ஒரு ஏக்கரில் சோளப் பயிர் செய்கையை மேற்கொள்வதற்குத் தேவையான விதைகளின் அளவு யாதென்பதையும்;

(ii) மேற்படி விதைகளுக்குச் செலவாகும் தொகை எவ்வளவென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1457/2023

கௌரவ மாயாதுன்ன சிந்தக அமல்,— பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) இலங்கையில் இன்றளவில் விநியோகிக்கப்பட்டுள்ள தேசிய அடையாள அட்டைகளின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) அவற்றில் இலத்திரனியல் அடையாள அட்டைகளின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(iii) இலங்கையின் சகல பிரஜைகளுக்கும் இலத்திரனியல் அடையாள அட்டை விநியோகிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும்;

(iv) ஆமெனில், மேற்படி இலத்திரனியல் அடையாள அட்டை விநியோகிக்கப்பட்டு, நிறைவு செய்வதற்கு எவ்வளவு காலம் எடுக்கும் என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1503/2023

கௌரவ (திருமதி) கோகிலா குணவர்தன,— வனசீவராசிகள் மற்றும் வனவளங்கள் பாதுகாப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) பின்னவல மிருகக்காட்சிசாலையின் அபிவிருத்திப் பணிகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றனவா என்பதையும்;

(ii) மேற்படி அபிவிருத்திப் பணிகள் நிறைவு செய்யப்படவுள்ள திகதி யாதென்பதையும்;

(iii) உள்நாட்டு, வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளுக்கு மேற்படி மிருகக்காட்சிசாலையை பார்வையிடுவதற்குத் தேவையான அடிப்படை வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளனவா என்பதையும்;

(iv) மேற்படி மிருகக்காட்சிசாலைக்கு எதிர்காலத்தில் சுற்றுலாப் பயணிகளைக் கவர்வதற்காக வேலைத்திட்டமொன்று தயாரிக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(v) ஆமெனில், அது பற்றிய விபரங்கள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1539/2023

கௌரவ (திருமதி) ராஜிகா விக்கிரமசிங்ஹ,— தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) வீட்டுப் பணிப்பெண்களாக வருடாந்தம் வெளிநாடு செல்லும் இலங்கைப் பெண்களின் எண்ணிக்கை ஒவ்வொரு மாவட்டத்தின் அடிப்படையில் தனித்தனியே எத்தனையென்பதையும்;

(ii) இவ்வாறு வெளிநாடு செல்லும்போது சேவை ஒப்பந்தம் கைச்சாத்திடப் படுகின்றதா என்பதையும்;

(iii) ஆமெனின், மேற்படி சேவை ஒப்பந்தத்தின் செல்லுபடிக் காலம் யாதென்பதையும்;

(iv) மேற்படி வீட்டுப் பணிப்பெண்கள் மற்றும் அவர்களின் குடும்பங்கள் தொடர்பில் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தினால் பின்னாய்வு மேற்கொள்ளப்படுகின்றதா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1575/2023

கௌரவ சஞ்சீவ எதிரிமான்ன,— மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அம்பாந்தோட்டை, பூநகரி, சியம்பலாண்டுவை மற்றும் திருகோணமலை ஆகிய பகுதிகளில் சூரியசக்தி பூங்காக்கள் இன்றளவில் அமைக்கப்பட்டுள்ளனவா;

(ii) ஆமெனில், மேற்படி ஒவ்வொரு சூரியசக்தி பூங்காவிலிருந்தும் தேசிய மின்சக்தி முறைமைக்கு வழங்கப்படும் மின் அலகுகளின் எண்ணிக்கை மெகாவாட்களில் வெவ்வேறாக யாது;

(iii) மேற்குறிப்பிட்ட சூரியசக்தி பூங்காக்கள் இன்றளவில் நடைமுறைப்படுத்தப் படவில்லையெனில், அவ் ஒவ்வொரு சூரியசக்தி பூங்காவினதும் நிர்மாணப் பணிகளின் முன்னேற்றம் வெவ்வேறாக யாது;

(iv) மேற்படி ஒவ்வொரு சூரியசக்தி பூங்காவினதும் நிர்மாணப் பணிகள் பூர்த்தி செய்யப்படும் திகதி வெவ்வேறாக யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1616/2023

கௌரவ திஸ்ஸ அத்தநாயக்க,— வனசீவராசிகள் மற்றும் வனவளங்கள் பாதுகாப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 1996ஆம் ஆண்டு 947/13ஆம் இலக்க வர்த்தமானப் பத்திரிகை மூலம் சரணாலயமாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ள முத்துராஜவல சரணாலயத்தின் எல்லைகள் இதுவரையிலும் அடையாளமிடப்படவில்லையெனில் அதற்கான காரணங்கள் யாவையென்பதையும்;

(ii) மேற்குறிப்பிட்ட சரணாலயத்திற்குள் உள்ள அரச மற்றும் தனியார் காணிகளின் அளவினை தனித்தனியே இனங்காண்பதற்கு இதுவரையிலும் நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லையெனில் அதற்கான காரணங்கள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) அரச வரைபடங்களுக்கு அமைவாக இனங்காணப்பட்டுள்ள மற்றும் மத்திய சுற்றாடல் அதிகார சபையினால் இனங்காணப்பட்டுள்ள மேற்குறிப்பிட்ட சரணாலயத்திற்குச் சொந்தமான காணிகளின் அளவானது ஹெக்டேர்களில் தனித் தனியே யாதென்பதையும்;

(ii) அரச வரைபடங்களுக்கு அமைவாக இனங்காணப்பட்டுள்ள மற்றும் மத்திய சுற்றாடல் அதிகார சபையினால் இனங்காணப்பட்டுள்ள காணிகளின் அளவுகளுக்கு இடையில் வேறுபாடு காணப்படுவதற்கான காரணங்கள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1630/2023

கௌரவ உபுல் மஹேந்திர ராஜபக்ஷ,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) எதிர்காலத்தில் ஆசிரியர் தொழிலுக்கு பட்டதாரிகளை மாத்தரம் ஆட்சேர்ப்புச் செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், மேற்படி பட்டதாரிகளுக்கு ஆசிரியர் பயிற்சி வழங்கப்படுமா என்பதையும்;

(iii) மேற்படி பட்டதாரிகளை ஆட்சேர்ப்புச் செய்யும் போது அவர்களின் ஆங்கில மொழி அறிவு, விளையாட்டுத் திறமைகள் மற்றும் அழகியற்கலை ஆற்றல்கள் தொடர்பில் கவனம் செலுத்தப்படுமா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) தொழில்சார் அடிப்படைக் கல்வி முறையொன்றுக்காக பாடத்திட்டங்களைத் திருத்தம் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

(ii) பாடசாலை மாணவர்களுக்கு தொழிற்பயிற்சி கல்வியை வழங்குவதன் பொருட்டு தொழில்பயிற்சி ஆசிரியர்களை ஆட்சேர்ப்புச் செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

(iii) கல்வி மறுசீரமைப்புகள் தொடர்பாக பொது மக்களின் கருத்துக்களை ஆராய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1632/2023

கௌரவ குணதிலக ராஜபக்ஷ,— போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மண்சரிவு காரணமாக மலைநாட்டுப் புகையிரதப் பாதைகளில் புகையிரதப் போக்குவரத்துக்கு நிதமும் இடையூறுகள் ஏற்படுகின்றன என்பதையும்;

(ii) அதனால் ஏற்படுகின்ற தாமதங்கள் காரணமாக வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் மற்றும் உள்நாட்டுப் பயணிகள் ஆகிய இரு தரப்பினரும் அசௌகரியத்துக்கு உள்ளாகின்றனர் என்பதையும்;

(iii) மேற்படி புகையிரதப் பாதைகளை புனரமைப்பதற்காக இராணுவச் சிப்பாய்களையும் புகையிரத ஊழியர்களையும் ஈடுபடுத்துவது செயற்றிறனற்றது என்பதையும்;

(iv) உலகின் ஏனைய நாடுகளில் நவீன தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி இவ்வாறான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன என்பதையும்;

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஆ) (i) இலங்கை புகையிரத திணைக்களத்தின் பொறியியலாளர்கள் மற்றும் தொழில்நுட்ப அலுவலர்களின் அறிவினைப் பயன்படுத்தி புகையிரதப் பாதைகளில் மண்ணை அகற்றுவதற்கான பெக்கோ இயந்திரமொன்றைத் தயாரிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

(ii) ஆமெனில், அது தொடர்பில் மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1635/2023

கௌரவ மிலான் ஜயதிலக்க,— தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2020 ஆம் ஆண்டு முதல் 2022.06.30 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் ஊடாக வெளிநாட்டு வேலைவாய்ப்புகளுக்காக அனுப்பப்பட்டுள்ள இலங்கை ஊழியர்களின் எண்ணிக்கை ஒவ்வொரு வருட அடிப்படையில் தனித்தனியே யாதென்பதையும்;

(ii) மேற்படி ஊழியர்கள் அனுப்பப்பட்டுள்ள நாடுகள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி ஒவ்வொரு நாட்டுக்கும் அனுப்பப்பட்டுள்ள ஊழியர்களின் எண்ணிக்கை தனித்தனியே யாதென்பதையும்;

(iv) தற்போது இலங்கைக்குக் கிடைத்துள்ள வெளிநாட்டு வேலைவாய்ப்பு கோட்டா ஒவ்வொரு நாட்டின் அடிப்படையில் தனித்தனியே யாதென்பதையும்;

(v) வேலைவாய்ப்புகளுக்காக வெளிநாடு செல்ல எதிர்பார்த்துள்ள இலங்கையர்களுக்காக இயங்கிவருகின்ற மொழிப் பயிற்சி நிலையங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

---

## பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

*

உண்ணாட்டரசிறை (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*

பிரிவிடல் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது.

## 2023 ஏப்ரல் 26, புதன்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

1674/2023

கௌரவ சாள்ஸ் நிர்மலநாதன்,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மன்னார் மாவட்டத்தில் உள்ள முருங்கன் வைத்தியசாலை 2018 ஆம் ஆண்டு ஆதார வைத்தியசாலையாக தரமுயர்த்தப்பட்ட போதிலும், மேற்படி வைத்தியசாலைக்குத் தேவையான வசதிகள் இற்றைவரை வழங்கப்படவில்லை என்பதையும்;

(ii) மருத்துவர்கள் உட்பட மேற்படி மருத்துவமனைக்கு அங்கீகரிக்கப்பட்டுள்ள ஊழியர்களின் எண்ணிக்கை மற்றும் தற்போது பணிபுரியும் ஊழியர்களின் எண்ணிக்கை தனித்தனியாக எத்தனையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி வைத்தியசாலையில் பிரேத அறை இன்மையால் சடலங்களை மன்னார் பொது வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்ல வேண்டியிருப்பதனால் பொதுமக்கள் பெரும் சிரமங்களை எதிர்கொள்வதை அறிவாரா என்பதையும்;

(ii) ஆமெனில், முருங்கன் வைத்தியசாலைக்கு பிரேத அறையை நிர்மாணிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும்;

(iii) முருங்கன் வைத்தியசாலையின் அபிவிருத்திப் பணிகள் எப்போது ஆரம்பிக்கப்படும் என்பதையும்;

மேலும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1755/2023

கௌரவ சமன்பிரிய ஹேரத்,— கைத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கைத்தறி நெசவு ஆடை உற்பத்திக்காக பயன்படுத்தப்படுகின்ற இயந்திரங்கள் இலங்கையில் உற்பத்தி செய்யப்படுகின்றனவா என்பதையும்;

(ii) இன்றேல், மேற்படி இயந்திரங்கள் இறக்குமதி செய்யப்படுகின்றனவா என்பதையும்;

(iii) 2015 ஆம் ஆண்டு தொடக்கம் இதுவரை இலங்கையில் உற்பத்தி செய்யப்பட்டுள்ள இயந்திரங்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(iv) கைத்தறி நெசவு ஆடை உற்பத்திக்குத் தேவையான மூலப்பொருட்களை இறக்குமதி செய்ய ஆண்டுதோறும் செலவிடப்படும் தொகை யாது என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1799/2023

கௌரவ குமாரசிறி ரத்நாயக்க,— கமத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மொனராகலை மாவட்டத்தில் பெருமளவில் கறவை மாடு வளர்ப்பு மேற்கொள்ளப்படுகின்றதென்பதையும்;

(ii) கறவை மாடுகளுக்கு உணவைப் பெற்றுக்கொள்வதில் பால் பண்ணையாளர்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்குவதோடு வனப் பாதுகாப்பு மற்றும் வன சீவராசிகள் திணைக்கள உத்தியோகத்தர்களுடன் அடிக்கடி மோதல்களும் ஏற்படுகின்றன என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) ஆமெனில், கறவை மாடுகளின் உணவுக்குப் பொருத்தமான மேய்ச்சல் தரைகளை அறிமுகப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1808/2023

கௌரவ அஜித் மான்னப்பெரும,— பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கம்பஹா மாவட்டத்தின், கொட்டதெனியாவ கிராமத்தை மையமாகக் கொண்டு கடந்த சில ஆண்டுகளாக பல்வேறு குற்றச் செயல்கள் இடம்பெற்று வருகின்றதென்பதையும்;

(ii) இக்கிராமத்தில் பல்வேறு குற்றச் செயல்கள் தற்போது இடம்பெறுவதால் அங்கு வசிக்கும் மக்கள் பீதியடைந்துள்ளனர் என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) இந்த நிலைமையினைக் கட்டுப்படுத்துவதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2528/2023

கௌரவ இம்ரான் மஹ்ரூப்,— போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) திருகோணமலை புகையிரத நிலையத்தில் பிரயாணிகளின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் புகையிரதப் பெட்டிகளின் எண்ணிக்கை எத்தனை;

(ii) மேற்படி புகையிரதப் பெட்டிகள் எவ்வளவு காலமாக பிரயாணத்தில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன;

(iii) மேற்குறிப்பிட்ட புகையிரதப் பெட்டிகள் மிகவும் பழமையானவையாகவும் தற்போது பயன்படுத்த முடியாத நிலையிலும் காணப்படுவதை அறிவாரா;

(iv) இலங்கையில் ஏராளமான புகையிரத நிலையங்களுக்கு நவீன புகையிரதப் பெட்டிகள் மற்றும் இயந்திரங்கள் வழங்கப்பட்டுள்ளபோதிலும் திருகோணமலை புகையிரத நிலையத்துக்கு நவீன புகையிரதப் பெட்டிகள் மற்றும் இயந்திரங்கள் வழங்கப்படாமைக்கான காரணங்கள் யாவை;

(v) திருகோணமலை புகையிரத நிலையத்தினையும் இப்புகையிரத நிலையத்துக்கு வழங்கப்பட்டுள்ள புகையிரப் பெட்டிகளையும் நவீனமயப்படுத்துவதற்காக எடுக்கப்படும் நடவடிக்கைகள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2573/2023

கௌரவ டீ. வீரசிங்க,— கமத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2019 ஆம் ஆண்டு தொடக்கம் இதுவரை நெல் சந்தைப்படுத்தல் சபையினால் எத்தனை மெற்றிக் தொன் நெல் கொள்வனவு செய்யப்பட்டுள்ளது என்பதையும்;

(ii) மேற்குறிப்பிட்ட ஒவ்வொரு ஆண்டிலும் ஒரு கிலோ கிராம் நெல் கொள்வனவு செய்யப்பட்ட விலை தனித்தனியே யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா ?

(ஆ) (i) இன்றளவில் நெல் சந்தைப்படுத்தல் சபையின் வசமுள்ள நெல் இருப்பின் அளவு யாதென்பதையும்;

(ii) நெல் சந்தைப்படுத்தல் சபையானது சதொச மற்றும் கூட்டுறவுச் சங்கங்களுக்கு மாத்திரம் நெல் வழங்குகின்றதா என்பதையும்;

(iii) இன்றேல், தனியார் துறையினருக்கும் நெல் வழங்குகின்றதா என்பதையும்;

(iv) நெல் சந்தைப்படுத்தல் சபை விலங்குத் தீவனத்திற்காக நெல் வழங்குகின்றதா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2620/2023

கௌரவ சட்டத்தரணி மதுர விதானகே,— புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2015 ஆம் ஆண்டு தொடக்கம் 2019 ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதியில் பௌத்த மறுமலர்ச்சி நிதியத்தில் ஏதேனும் முறைகேடு, முறையற்ற நியமனம், ஊழல் செயற்பாடு அல்லது சட்டவிரோத செயற்பாடு இடம்பெற்றுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அவை வெவ்வேறாக யாவையென்பதையும்;

(iii) மேற்குறிப்பிடப்பட்ட ஒவ்வொரு செயற்பாட்டின் விளைவாகவும் அரசாங்கம் இழந்துள்ள நிதி, சொத்து மற்றும் மனித வளங்களின் பெறுமதி வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மேற்படி (அ)(i) இல் குறிப்பிடப்பட்ட செயற்பாடுகளுக்குப் பொறுப்புக் கூறவேண்டிய அலுவலர்களை அடையாளம் காண்பதற்கென புலனாய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளனவா என்பதையும்;

(ii) பொறுப்புக்கூற வேண்டிய அலுவலர்கள் அடையாளம் காணப்பட்டிருப்பின், அவர்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(iii) அவர்களுக்கு எதிராக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாவிடின், அதற்கான காரணங்கள் யாவையென்பதையும்;

(iv) அவர்களுக்கு எதிராக எதிர்காலத்தில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

(v) எதிர்காலத்தில் இடம்பெறக்கூடிய இத்தகைய ஊழல் செயற்பாடுகளைத் தடுப்பதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

2689/2023

கௌரவ கே.பீ.எஸ். குமாரசிறி,— கமத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2022/2023 ஆம் ஆண்டிற்கான பெரும்போகத்தின் நெல் அறுவடை நடவடிக்கைகள் இடம்பெற்று வருவதனால் நெல் கொள்வனவு செய்வதற்காக தற்போது அமுல்படுத்தப்பட்டுள்ள வேலைத்திட்டம் யாது என்பதையும்;

(ii) ஒரு ஏக்கர் காணியில் நெற் பயிர்ச்செய்கையை மேற்கொள்வதற்கு செலவாகும் தொகை எவ்வளவு என்பதையும்;

(iii) நெல்லின் விலையைத் தீர்மானிக்கும்போது மேற்படி தொகை அடிப்படையாகக் கொள்ளப்பட்டுள்ளதா என்பதையும்;

(iv) தனியார் வியாபாரிகளினால் மிகக் குறைந்த விலையில் நெல் கொள்வனவு செய்யப்படுவதை நிறுத்த மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கை யாது என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) நெல்லின் மூலம் அரிசி அல்லது வேறு உற்பத்திகளை மேற்கொண்டு இலங்கையில் உணவுப் பாதுகாப்பினை உறுதிப்படுத்துவதற்கும், ஏற்றுமதி சந்தையை மேம்படுத்துவதற்கும், விவசாயிகளுக்கு சலுகைகளை வழங்குவதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2841/2023

கௌரவ யூ.கே. சுமித் உடுகும்புர,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அரசாங்க வைத்தியசாலைகளில் தற்போது சேவையாற்றுகின்ற தாதி அலுவலர்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(ii) அரசாங்க தாதிச் சேவையில் தற்போது காணப்படுகின்ற வெற்றிடங்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(iii) மேற்படி வெற்றிடங்களை நிரப்புவதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கை யாது என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2878/2023

கௌரவ யதாமிணீ குணவர்தன,— நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) வெளிநாட்டு வேலைவாய்ப்புகளில் ஈடுபட்டுள்ள இலங்கையர்களால் இலங்கைக்கு அனுப்பப்படுகின்ற நிதியின் அளவானது கடந்த மூன்று தசாப்தங்களுக்கு முன்பிருந்ததை விட இன்றளவில் உயர் பெறுமதியைக் கொண்டுள்ளது என்பதனை அறிவாரா என்பதையும்;

(ii) எண்ணிக்கை அளவில் அதிகளவான இலங்கையர்கள் தொழில் புரிகின்ற பத்து வெளிநாடுகளும் பத்து நகரங்களும் தனித்தனியாக யாவை என்பதையும்;

(iii) எண்ணிக்கை அளவில் அதிகளவான இலங்கையர்கள் பணம் அனுப்புகின்ற பத்து வெளிநாடுகளும் பத்து நகரங்களும் தனித்தனியாக யாவை என்பதையும்;

(iv) இலங்கைக்கு கூடுதலாக பணம் அனுப்புகின்ற பத்து வெளிநாடுகளும் பத்து நகரங்களும் தனித்தனியாக யாவை என்பதையும்;

(v) வெளிநாடுகளிலிருந்து பணம் அனுப்புவதற்காக இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்டுள்ள வங்கிகள் அல்லது நிதி நிறுவனங்கள் உள்ளனவா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

---

## 2023 ஏப்ரல் 27, வியாழக்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

2/2023

கௌரவ சமிந்த விஜேசிறி,— நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) “நல்லாட்சி அரசாங்கம்” ஆட்சியிலிருந்த 2015-2019 ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலப்பகுதியில் இலங்கை மத்திய வங்கி மோசடி இடம்பெற்றது என்பதை அறிவாரா என்பதையும்;

(ii) மேற்படி மோசடி காரணமாக இடம்பெற்றுள்ள நிதிசார் நட்டம் எவ்வளவு என்பதையும்;

(iii) மேற்படி தொகையை மீள அறவிட்டுக்கொள்வதற்குத் தேவையான நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டுள்ளனவா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி மோசடியுடன் தொடர்புடையதாக குற்றஞ்சாட்டப்பட்டுள்ள ஆட்களின் பெயர்கள் யாவை என்பதையும்;

(ii) அவர்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்டுள்ள சட்ட நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

383/2023

கௌரவ சட்டத்தரணி வசந்த யாப்பாபண்டார,— தொழில்நுட்ப அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பல்வேறு தொலைபேசி நிறுவனங்களுக்குரிய சிம்அட்டைகள் அரசாங்கத்தின் முறையான ஒழுங்குபடுத்தலின்றி பிரதான நகரங்களின் நடைபாதைகளில் விற்பனை செய்யப்படுகின்றன என்பதையும்;

(ii) மேற்படி சிம்அட்டைகளை மோசடியாக பாரிய அளவில் கொள்வனவு செய்கின்ற நபர்களினால் அவை தவறாக பயன்படுத்தப்பட்டு பல்வேறான முறைகேடுகள் மேற்கொள்ளப்படுகின்றன என்பதையும்;

(iii) இணையத்தளத்தினூடாக பொருட்களை வழங்குவதாக உறுதியளித்து வங்கிக் கணக்குகளில் பணத்தை வரவு வைத்து மோசடி செய்யும் தீத்தொழில் இடம்பெறுகின்றது என்பதையும்;

(iv) கண்டி, இரத்தினபுரி, பிலியந்தலை, பதுளை மற்றும் கொழும்பு உட்பட பெரும்பாலான பிரதேசங்களைச் சேர்ந்த இளைஞர்கள் இன்றளவில் மேற்படி தீத்தொழிலுக்கு இரையாகியுள்ளனர் என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) ஆமெனில், மேற்படி மோசடிகளைத் தடுப்பதற்கு இன்றளவில் மேற்கொள்ளப் பட்டுள்ள நடவடிக்கைகளும் எதிர்காலத்தில் மேற்கொள்ள எதிர்பார்க்கப்படும் நடவடிக்கைகளும் வெவ்வேறாக யாவை என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

419/2023

கௌரவ கயந்த கருணாதிலக்க,— வெகுசன ஊடக அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் பதிவுசெய்யப்பட்ட தொலைக்காட்சி அலைவரிசைகளினதும் வானொலி அலைவரிசைகளினதும் எண்ணிக்கை தனித்தனியாக எத்தனையென்பதையும்;

(ii) அவற்றின் பெயர்கள் தனித்தனியாக யாவையென்பதையும்;

(iii) தொலைக்காட்சி அலைவரிசைகளுக்கான உரிம நிபந்தனைகளுக்கும் வானொலி அலைவரிசைகளுக்கான உரிம நிபந்தனைகளுக்கும் இடையே வேறுபாடுகள் உள்ளதென்பதை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(iv) மேற்படி வேறுபாடுகளைக் களைந்து ஒருமித்த நிலையை ஏற்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

432/2023

கௌரவ புத்திக பத்திறண,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் விற்பனை செய்யப்படுகின்ற பால்மா வகைகளில் டி.சீ.டி மெலமைன், செயற்கை லெக்டோஸ், பன்றி எண்ணெய், மாட்டுக் கொழுப்பு மற்றும் மனித உடலுக்கு ஒவ்வாத பிற இரசாயனப் பதார்த்தங்கள் அடங்கியிருப்பதை உறுதிப்படுத்திக்கொள்வதற்கான பரிசோதனைகளை அரசாங்கம் மேற்கொண்டுள்ளதா என்பதையும்;

(ii) அவ்வாறாயின், பரிசோதனைகளை மேற்கொள்ளும் நிறுவனம்/ நிறுவனங்கள் யாவை என்பதையும்;

(iii) அத்தகைய நிறுவனம்/நிறுவனங்களால் இதுவரையில் மேற்கொள்ளப்பட்டுள்ள பரிசோதனைகளுடன் தொடர்புடைய அறிக்கைகளைச் சமர்ப்பிப்பாரா என்பதையும்;

(iv) சர்வதேச தரநியமங்களுக்கு இயைபாக அத்தகைய பரிசோதனைகளை மேற்கொள்ளத் தேவையான வசதிகளை அந்த நிறுவனம் / நிறுவனங்கள் கொண்டுள்ளனவா என்பதையும்;

(v) இன்றேல், அந்த வசதிகளை வழங்க நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) மேலே (அ)(i) இல் தெரிவிக்கப்பட்டுள்ள இரசாயனப் பதார்த்தங்கள் அடங்கியுள்ளதாக உறுதிப்படுத்தப்பட்டுள்ள பால்மா வகைகளை உற்பத்தி செய்கின்ற நிறுவனங்களுக்கு எதிராக எடுத்துள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

688/2023

கௌரவ சாணக்கியன் ராஜபுத்திரன் இராசமாணிக்கம்,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பழுகாமம் பிரதேச வைத்தியசாலை இதுவரை DH - C தரம் வரை மாத்திரமே தரமுயர்த்தப்பட்டுள்ளதென்பதை அறிவாரா என்பதையும்;

(ii) ஆமெனில், மேற்படி வைத்தியசாலையை DH-B அல்லது A தரத்திற்கு தரமுயர்த்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும்;

(iii) மேற்படி வைத்தியசாலையை DH -B அல்லது A தரத்திற்கு தரமுயர்த்தப்படும் திகதி யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி வைத்தியசாலையின் மகப்பேறு பிரிவுக்குத் தேவையான உபகரணங்கள் (CTG Machine, Warmer) இன்மையால் கர்ப்பிணிப் பெண்கள் பல்வேறு சிரமங்களை எதிர்கொள்கின்றனர் என்பதையும்;

(ii) அவசர சிகிச்சைப் பிரிவுக்குத் தேவையான உபகரணங்கள் எதுவும் வைத்தியசாலையில் இல்லை என்பதையும்;

அவர் அறிவாரா?

(இ) (i) ஆமெனில், மேற்குறிப்பிட்ட வைத்தியசாலைக்குத் தேவையான உபகரணங்களை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும்;

(ii) ஆமெனில், மேற்படி உபகரணங்கள் வழங்கப்படும் திகதி யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

815/2023

கௌரவ ஜகத் குமார சுமித்ராரச்சி,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) மத்திய அரசாங்கத்தினதும் மாகாண சபைகளினதும் கீழ் இயங்கி வருகின்ற வைத்தியசாலைகளின் எண்ணிக்கையானது, அவ்வைத்தியசாலை களின் வகைப்படுத்தலுக்கு அமைவாக தனித்தனியே யாதென்பதையும்;

(ii) அவ்வைத்தியசாலைகளின் தீவிர சிகிச்சைப் பிரிவுகளில் உள்ள கட்டில்களின் எண்ணிக்கையும் சாதாரண விடுதிகளில் உள்ள கட்டில்களின் எண்ணிக்கையும் தனித்தனியே யாதென்பதையும்;

(iii) மேலே (i) இல் குறிப்பிடப்பட்டுள்ள வைத்தியசாலைகளில் கடமையாற்றும் வைத்தியர்களின் மொத்த எண்ணிக்கையானது, வைத்திய நிபுணர்கள் மற்றும் சாதாரண வைத்தியர்கள் என்ற அடிப்படையில் தனித்தனியே யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) இன்றளவில் இலங்கையில் உள்ள வைத்தியசாலைகளில் பயன்படுத்தப்படும் மருந்து வகைகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) அம்மருந்து வகைகளுள் தற்போது தட்டுப்பாடு நிலவுகின்ற மருந்து வகைகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) இலங்கைக்குத் தேவையான மருந்து வகைகளை இறக்குமதி செய்வதற்கு அரசாங்கத்தினால் வருடமொன்றில் செலவிடப்படும் நிதித் தொகையானது இலங்கை ரூபாயிலும் ஐக்கிய அமெரிக்க டொலர்களிலும் தனித்தனியே யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

831/2023

கௌரவ இம்தியாஸ் பாகிர் மாகார்,— போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) பேருவளை பிரதேச செயலாளர் பிரிவில், இலக்கம் 746-இந்திரிலிகொட கிராம அலுவலர் பிரிவின், பாடசாலை வீதியை காப்பட் இட்டு அபிவிருத்தி செய்யும் அடிப்படைப் பணிகள் மேல் மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் களுத்துறை அலுவலகத்தினால் மேற்கொள்ளப்பட்டன என்பதையும்;

(ii) அதற்கமைய, முதற் கட்டமாக மேற்படி வீதியில் கொன்கிறீட் கற்கள் இடப்பட்டன என்பதையும்;

(iii) தற்போது மேற்படி கொன்கிறீட் கற்கள் மழை நீரில் அடித்துச் செல்லப்பட்டுள்ளதன் காரணமாக வீதி சேதமடைந்து போக்குவரத்துக்கு பொருத்தமற்ற நிலையில் காணப்படுகின்றது என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி வீதியை காப்பட் இட்டு அபிவிருத்தி செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

(ii) ஆமெனில், மேற்படி நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படும் திகதி யாது என்பதையும்;

(iii) மேற்படி கருத்திட்டத்திற்காக ஒதுக்கப்பட்ட தொகை யாது என்பதையும்;

(iv) மேற்படி அ (iii) இல் குறிப்பிடப்பட்டுள்ள விடயம் காரணமாக நிதி விரயமாகி இருப்பின், அதற்குப் பொறுப்புக்கூற வேண்டிய ஆட்கள் யாவர் என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

835/2023

கௌரவ சட்டத்தரணி பிரேம்நாத் சி. தொலவத்த,— நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2016 ஆம் ஆண்டு முதல் இதுவரை கொழும்பு மாவட்டத்தில் அடையாளங் காணப்பட்டுள்ள அதிக ஆபத்துடனான வீடுகளின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) மேற்படி வீடுகளில் குடியிருக்கும் குடும்பங்களுக்கு மத்தியில் மீள்குடியேற்ற நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் அனுகூலங்கள் கிடைக்கப்பெற்ற குடும்பங்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(iii) மீள்குடியேற்ற நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் மேற்குறிப்பிட்ட அதிக ஆபத்துடனான வீடுகளில் குடியிருக்கும் குடும்பங்களுக்கு அனுகூலங்கள் வழங்கப்படுவதில் தாமதம் காணப்படுகின்றது என்பதை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

847/2023

கௌரவ காமினி வலேபொட,— கமத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2021ஆம் ஆண்டு விதிக்கப்பட்ட இரசாயன பசளைக்கான தடை காரணமாக இலங்கைக்கு ஏற்பட்ட பொருளாதார பாதிப்பு கணக்கிடப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், நெல், தேயிலை, இறப்பர், கறுவா, தென்னை மற்றும் காய்கறிகள் போன்ற ஒவ்வொரு பயிர் வகையினதும் உற்பத்தியில் ஏற்பட்ட வீழ்ச்சி தனித் தனியே யாதென்பதையும்;

(iii) இரசாயனப் பசளையை தடை செய்ததன் காரணமாக விவசாயிகள் விவசாய நடவடிக்கைகளிலிருந்து விலகி உள்ளனரா என்பதையும்;

(iv) ஆமெனில், அத்தகைய விவசாயிகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2931/2023

கௌரவ ஹெக்டர் அப்புஹாமி,— வர்த்தக, வாணிப மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2015 ஆம் ஆண்டு தொடக்கம் இதுவரை இலங்கையில் முட்டைக்கான கேள்வி மற்றும் நிரம்பல் ஒவ்வொரு ஆண்டின் அடிப்படையில் தனித்தனியாக யாதென்பதையும்;

(ii) இன்றளவில் கேள்விக்கேற்ற நிரம்பல் காணப்படாமையால் முட்டை விலை அதிகரித்துள்ளதென்பதை அறிவாரா என்பதையும்;

(iii) முட்டை விலையை நியாயமான மட்டத்தில் பேணிச் செல்வதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

---

## 2023 ஏப்ரல் 28, வெள்ளிக்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

858/2023

கௌரவ சட்டத்தரணி ரஊப் ஹகீம்,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2019-2022 காலப்பகுதியில் அரசாங்கத்தினால் நிர்ணயிக்கப்பட்ட, ஓட்டமாவடியிலுள்ள கொவிட்-19 காரணமாக இறந்தவர்களை அடக்கம் செய்யும் இடத்தில் அடக்கம் செய்யப்பட்ட கொவிட்-19 காரணமாக இறந்த உடல்களின் மொத்த எண்ணிக்கையை வெவ்வேறாகவும்;

(ii) மேலே சொல்லப்பட்ட இறந்த உடல்களின் எண்ணிக்கையை அவற்றின் வயது, பால், இனம், மதம் மற்றும் வதிவிட மாகாணம்/மாவட்டம் ஆகியவற்றுக்கு இணங்க வெவ்வேறாகவும்;

(iii) கொவிட்-19 காரணமாக இறந்தவர்களின் உடல்களை அடக்கம் செய்யும் இடமாக அரசாங்கம் ஓட்டமாவடியைத் தெரிவுசெய்தமைக்கான அடிப்படையையும்;

(iv) ஓட்டமாவடியைப் போன்று அதே அடிப்படையையும் பிரமாணங்களையும் பயன்படுத்தி அரசாங்கத்தினால் நிர்ணயிக்கப்பட்ட கொவிட்– 19 காரணமாக இறந்தவர்களின் உடல்களை அடக்கம் செய்யும் இடமாக/ இடங்களாக ஓட்டமாவடி தவிர்ந்த வேறு ஏதேனும் இடத்தை/ இடங்களைத் தெரிவு செய்வதற்கு அரசாங்கம் ஏதேனும் முயற்சிகளை மேற்கொண்டதா என்பதையும்;

அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

866/2023

கௌரவ ரோஹண பண்டார,— பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மிஹிந்தலை பிரதேச சபையால் புதிய வர்த்தக கட்டிடத் தொகுதியொன்று நிர்மாணிக்கப்பட்டுள்ளதை அறிவாரா என்பதையும்;

(ii) ஆமெனில், மேற்படி வர்த்தக கட்டிடத் தொகுதியினை நிர்மாணிப்பதற்கு செலவிடப்பட்ட பணத்தொகை எவ்வளவு என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி வர்த்தக கட்டிடத் தொகுதியில் நிர்மாணிக்கப்பட்டுள்ள கடை அறைகளின் மொத்த எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(ii) மேற்படி கடை அறைகளை பகிர்ந்தளிக்கையில் முறைகேடு இடம்பெற்றுள்ளதை அறிவாரா என்பதையும்;

(iii) ஆமெனில், அதனை நிவர்த்தி செய்வதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1301/2023

கௌரவ துஷார இந்துனில் அமரசேன,— கைத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் தற்போது இயங்கும் நிலையிலுள்ள ஆடைத் தொழிற்சாலை களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) மேற்படி ஆடைத் தொழிற்சாலைகளினால் உருவாக்கப்பட்டுள்ள நேரடி மற்றும் மறைமுக வேலைவாய்ப்புகளின் எண்ணிக்கை தனித்தனியாக யாதென்பதையும்;

(iii) 2020 ஆம் ஆண்டிலிருந்து இற்றைவரை மேற்படி ஆடைத் தொழிற்சாலைகளின் மூலம் இலங்கையின் மொத்த தேசிய வருமானத்திற்கு கிடைத்துள்ள பங்களிப்பு ஒவ்வொரு வருடத்திற்கும் ஏற்ப சதவீத அடிப்படையில் தனித்தனியாக யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) தற்போதைய எரிபொருள் நெருக்கடி ஆடைத் தொழில்துறை மீது பாரிய தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளதென்பதை அறிவாரா என்பதையும்;

(ii) இலங்கையில் ஆடைத் தொழில்துறையை மேம்படுத்துவதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கை யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1302/2023

கௌரவ கிங்ஸ் நெல்சன்,— போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) பொருட்களை ஏற்றிச் செல்வதற்கு தற்போது ஈடுபடுத்தப்பட்டுள்ள புகையிரதங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) மேற்படி ஒவ்வொரு புகையிரத்தினதும் சேரிடம் வெவ்வேறாக யாதென்பதையும்;

(iii) பொருட்களை ஏற்றிச் செல்வதன் பொருட்டு அதிகமாக புகையிரதங்களை ஈடுபடுத்துவதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1313/2023

கௌரவ நலீன் பண்டார ஜயமஹ,— நீர்ப்பாசன அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பிரான்ஸ் அரசாங்கத்தின் கடனுதவித் திட்டத்தின் கீழ் செயற்படுத்தப்படும் கிழக்கு மாகாணத்தின் முந்தானையாறு ஆற்று வடிநில கருத்திட்டத்திற்கான அபிவிருத்தி நடவடிக்கைகளின் கீழ் 02 நீர்த்தேக்கங்கள் நிர்மாணிக்கப் படவுள்ளன என்பதையும்;

(ii) மேற்குறிப்பிட்ட கருத்திட்டத்திற்கு கடனுதவி வழங்கும் தரப்பினர், அந்த நீர்த்தேக்கங்களில் களிமண் அணைகளை அமைப்பதற்கு வெளிநாட்டு ஆலோசகர்களின் ஒத்துழைப்பினைப் பெற்றுக்கொள்ள எதிர்பார்க்கின்றனர் என்பதையும்;

(iii) ஆயினும், நிபுணத்துவ அறிவுடைய பொறியியலாளர்கள் இந்நாட்டில் உள்ளனர் என்பதையும்;

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஆ) வெளிநாட்டு ஆலோசகர்களின் சேவையைப் பெற்றுக்கொள்ள வேண்டுமென கடன் வழங்கும் தரப்பினரால் அழுத்தம் கொடுக்கப்பட்டதா என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) கிழக்கு மாகாணத்தில், கல்லோயா நவோதய கருத்திட்டத்தின் அனைத்து நிதியும் செலவிடப்பட்டுள்ள போதிலும் இயந்திர வேலைகள் உட்பட சில வேலைகள் இன்னும் பூர்த்தி செய்யப்படாமையால் இக்கருத்திட்டத்தின் பணிகள் முழுமையாக நிறைவு செய்யப்படவில்லையென்பதை அறிவாரா என்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1318/2023

கௌரவ மொஹமட் முஸம்மில்,— சுற்றாடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) களனி கங்கையை அண்டியதாக அமைந்துள்ள கைத்தொழிற்சாலைகளின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(ii) அக்கைத்தொழிற்சாலைகளால் வெளியேற்றப்படும் கழிவுநீர், அந்த கங்கையுடன் கலப்பதை அறிவாரா என்பதையும்;

(iii) அந்தக் கழிவுநீர் காரணமாக களனி கங்கையின் நீருக்கு ஏற்படுகின்ற பாதிப்பு குறித்து ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளதா என்பதையும்;

(iv) கழிவுநீரை களனி கங்கைக்கு வெளிவிடுவதைத் தடுக்க இன்றளவில் எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1321/2023

கௌரவ (திருமதி) ரோஹினீ குமாரி விஜேரத்ன,— வனசீவராசிகள் மற்றும் வனவளப் பாதுகாப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) மின்னேரியா மற்றும் கவுடுல்ல ஆகிய தேசியப் பூங்காக்களில் சுற்றுலாக் கைத்தொழிலை மேம்படுத்தும் நோக்கத்துடன் "ஹுருலு பரிசர வனோத்யான சங்வர்தன சமித்திய" என்ற பெயரில் அமைப்பொன்று தாபிக்கப்பட்டுள்ளது என்பதையும்;

(ii) குறித்த அமைப்பு வனப் பாதுகாப்பு கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு முரணாக தாபிக்கப்பட்டுள்ளது என்பதையும்;

(iii) குறித்த அமைப்பினால் அரச நிதிக் கொள்கைக்கு முரணாக ஒரு கோடி எழுபது இலட்சம் ரூபா பெறப்பட்டுள்ளது என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) மேற்படி நிறுவனத்தால் புரியப்பட்டுள்ள நிதி மோசடி தொடர்பில் அமைச்சு எடுக்கும் நடவடிக்கை யாதென்பதை அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல் ஏன்?

1327/2023

கௌரவ இஷாக் ரஹுமான்,— கைத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) எப்பாவல, வரையறுக்கப்பட்ட லங்கா பொஸ்பேட் கம்பனியில் சேவையாற்றுகின்ற ஊழியர்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) அதில் நிறைவேற்றுத் தர உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(iii) மேற்படி உத்தியோகத்தர்களின் மாதாந்த போக்குவரத்துக் கொடுப்பனவு எவ்வளவென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) எப்பாவல, வரையறுக்கப்பட்ட லங்கா பொஸ்பேட் கம்பனியினால் மாதாந்தம் எத்தனை தொன் உரம் உற்பத்திச் செய்யப்படுகின்றதென்பதையும்;

(ii) 50 கிலோகிராம் உர மூடையொன்றை உற்பத்தி செய்வதற்கு செலவாகும் தொகை எவ்வளவென்பதையும்;

(iii) உர உற்பத்தியில் பங்கெடுக்கும் ஊழியர்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) மேற்குறிப்பிட்ட நிறுவனம் நட்டத்தில் இயங்குமொரு நிறுவனமென்பதை ஏற்றுக்கொள்கின்றாரா என்பதையும்;

(ii) ஆமெனில், மேற்படி நிறுவனத்தை இலாபமீட்டும் நிறுவனமாக மாற்றுவதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1458/2023

கௌரவ மாயாதுன்ன சிந்தக அமல்,— கடற்றொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கைக்கு வருடாந்தம் இறக்குமதி செய்யப்படும் டின் மீன்களின் அளவு எத்தனை தொன்கள் என்பதையும்;

(ii) அதற்காக செலவிடப்படும் பணத் தொகை எவ்வளவு என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) இலங்கையில் நன்னீர் மீன்களை டின்களில் அடைக்கும் கைத்தொழிலை மேற்கொள்வதற்கு தனியார் துறையைச் சார்ந்த தொழில்முயற்சியாளர்கள் முன்வந்துள்ளனரா என்பதையும்;

(ii) ஆமெனில், நன்னீர் மீன்களை டின்களில் அடைப்பதற்கான தொழிற்சாலைகளை ஆரம்பிப்பதற்காக தெரிவு செய்யப்பட்டுள்ள நீர்த்தேக்கங்கள் யாவை என்பதையும்;

(iii) அத்தொழிற்சாலைகளை ஆரம்பிப்பது தொடர்பில் இன்றளவில் மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1504/2023

கௌரவ (திருமதி) கோகிலா குணவர்தன,— கைத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பிரம்பு, மூங்கில் மற்றும் பனையோலை சார்ந்த பொருட்களின் உற்பத்திக் கைத்தொழில்களை ஊக்குவிப்பதற்காக மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

(ii) மேற்படி பொருட்களை விற்பனை செய்வதற்கான சந்தை உள்ளதா என்பதையும்;

(iii) மேற்படி பொருட்களை ஏற்றுமதி செய்வதற்கான வேலைத்திட்டமொன்று உள்ளதா என்பதையும்;

(iv) மேற்படி பொருட்களை உற்பத்தி செய்வதற்குத் தேவையான மூலப் பொருட்களை தட்டுப்பாடின்றி பெற்றுக்கொள்வதற்கான வேலைத்திட்டமொன்று உள்ளதா என்பதையும்;

(v) ஆமெனில், மேற்படி வேலைத்திட்டம் யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?